நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் பேரணி**

First Published : 11 May 2010 10:41:55 AM IST

நாகர்கோவில், மே 10: தமிழ்நாடு மாநில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தைச் சேர்ந்தோர் நாகர்கோவிலில் திங்கள்கிழமை பேரணி நடத்தினர்.

ரேஷன் கடைப் பணியாளர்களுக்கு புதிய ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மேளதாளம் முழங்க இப் பேரணி நடைபெற்றது.

நாகர்கோவில் மீனாட்சிபுரத்திலுள்ள சங்க அலுவலகத்திலிருந்து பேரணி தொடங்கியது. பேரணிக்கு சங்க மாவட்டத் தலைவர் ஞானதாஸ் தலைமை வகித்தார்.

செயலர் முருகானந்தம், பொருளாளர் சகாயதிலகராஜ், துணைத் தலைவர் தங்கமணி, இணைச் செயலர் சொர்ணப்பன், சுவாமிதாஸ், அரசு ஊழியர் சங்க முன்னாள் தலைவர் நீலகண்டபிள்ளை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பேரணி வேப்பமூடு சந்திப்பு, டதிபள்ளி சந்திப்பு வழியாக ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது. பேரணி முடிவில் கோரிக்கைகள் அடங்கிய மனு ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கலைச்செல்வனிடம் வழங்கப்பட்டது.

**தொடரும் சூறாவளி: கலக்கத்தில் விவசாயிகள்**

First Published : 11 May 2010 10:41:34 AM IST

குலசேகரம், மே 10: கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து 3 நாள்களாக வீசி வரும் சூறாவளிக் காற்றில் ஆயிரக்கணக்கான ரப்பர், வாழை, தென்னைகள் மற்றும் பயிர்கள் சேதமாகின. இதனால் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்டப் பகுதிகளில் கடந்த 3 நாள்களாக மழையுடன் சூறாவளிக் காற்று வீசி வருகிறது.

இதனால் வீடுகள் மற்றும் ரப்பர், வாழை, தென்னை உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்து வருகின்றன.

மாவட்டத்தில் சனிக்கிழமை வலியாற்று முகம், சாண்டம், செங்கோடி, ஒட்டலிவிளை உள்ளிட்ட பகுதிகளில் சில வீடுகளின் ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் கூரைகள் காற்றில் சேதமடைந்தன. வாழை, ரப்பர் மரங்கள் சேதமடைந்தன.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் சுருளகோடு, சித்திரம்கோடு காயல்கரை, திருநந்திக்கரை, திட்டவிளை, சேக்கல், காமூர், அரமன்னம், கண்ணனூர், பருத்திவாய்க்கால், சிறக்குளம் உள்ளிட்ட இடங்களில் ஏராளமான வாழை, ரப்பர் மரங்கள் சாய்ந்தன.

கண்ணனூர் பகுதியில் விவசாயி மணியின் வீட்டின் கூரை காற்றில் தூக்கிவீசப்பட்டது.

இப் பகுதியில் விவசாயிகள் பலருக்கும் 100-க்கும் மேற்பட்ட ரப்பர் மரங்கள் சேதமடைந்துள்ளன.

தொடரும் சூறாவளிக் காற்றால் விவசாயிகள் மிகுந்த கலக்கத்தில் உள்ளனர்.

இதுகுறித்து கன்னியாகுமரி மாவட்ட உழவர் பெருமன்றச் செயலர் பி. ஹென்றி கூறியதாவது:

மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் பலத்த காற்று வீசுவதால் வாழை, ரப்பர் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

வாழை விவசாயிகள் ஆயிரக்கணக்கில் கடன் வாங்கி வாழை பயிரிடுகின்றனர். ஆனால் காற்றில் வாழைகள் சேதமடைந்தால் அரசு நிவாரணம் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இதுபோன்ற நிலைதான் ரப்பர் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

25 ஆண்டு காலம் பலன் கொடுக்கக் கூடிய ரப்பர் மரங்கள் காற்றில் ஒடிந்து சேதமாகியுள்ளன. இதனால் விவசாயிகள் கடும் வேதனையில் உள்ளனர்.

எனவே மாவட்ட நிர்வாகம் உடனடியாக சேதங்களை மதிப்பிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

**விவசாயத் தொழிலாளி குடும்பத்துக்கு விபத்து உதவித்தொகை ரூ. 1 லட்சம்**

First Published : 11 May 2010 10:36:48 AM IST

நாமக்கல், மே 10: விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் கீழ், விவசாயத் தொழிலாளி ஒருவரது குடும்பத்துக்கு விபத்து உதவித்தொகையாக ரூ. 1.02 லட்சம் வழங்கப்பட்து.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திங்கள்கிழமை நடந்தது. இக் கூட்டத் துக்கு ஆட்சியர் சகாயம் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் கி. சாந்தி முன்னிலை வகித்தார்.

பல்வேறு துறையைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். மொத்தம் 427 மனுக்கள் பெறப்பட்டன.

பெரும்பாலானவை முதியோர் உதவித் தொகை, ஆதரவற்றோர் உதவித் தொகை, வீட்டுமனைப் பட்டா மாறுதல், இலவச வீட்டு மனை, போக்குவரத்து வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, கல்வி கடன் கோரி வந்திருந்தன.

இந்த மனுக்கள் அனைத்தும் அந்தந்த துறை அலுவலர்களிடம் ஒப்படைத்து 15 நாட்களுக்குள் உரிய பதில் அளிக்க வேண்டும் என ஆட்சியர் சகாயம் அறிவுறுத்தினார். மனுக்கள் நிராகரிக்கப்பட்டால் அதற்கான காரணத்தை ஒருவாரத் துக்குள் தெரியப்படுத்த வேண்டும். புதிய குடும்ப அட்டை கோரிய மனுக்கள் மீது 20 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து உடனடியாக குடும்ப அட்டை வழங்க வேண்டும். குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக மனுக்கல் வரப்பெறறால் அவற்றின் மீது தனி கவனம் செலுத்தி விரைந்து தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆட்சியர் உத்தர விட்டார்.

இக் கூட்டத்தில், விவசாயத் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினராக இருந்து விபத்தில் உயிரிழந்த ராசிபுரத்தைச் சேர்ந்த முருகேசன் குடும்பத்துக்கு ரூ. 1 லட்சத்து 2,500 வழங்கப்பட்டது. இதற்கான காசோலையை முருகேசனின் மனைவி கற்பகத்திடம் ஆட்சியர் வழங்கினார். மேலும், ஆதிதிராவிட நலத்துறை மூலம் கண்பார்வையற்ற இருவருக்கு சிங்களாந்தபுரத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது. மாவட்ட வழங்கல்துறை மூலம் 15 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

**கால்வாய், குளங்களை தூர்வார விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

First Published : 10 May 2010 09:40:22 AM IST

நாகர்கோவில், மே 9: அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தில் உள்ள கால்வாய், குளங்களைத் தூர்வாரி பராமரிக்க வேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அகஸ்தீஸ்வரம் ஒன்றிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் முத்துகுமார், செயலர் எம். பால் உள்ளிட்டோர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அகஸ்தீஸ்வரம் ஒன்றியம், பல குளங்களையும், கால்வாய்களையும் கொண்ட விவசாயப் பகுதியாகும். இப்பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பெரும்பாலான பகுதி வீட்டுமனைகளாக மாறி வருகிறது. மேலும், குளங்களும், கால்வாய்களும் பராமரிக்கப்படாததால் செடி, கொடிகள் நிறைந்தும், மணல் தூர்ந்தும் கிடக்கிறது.

இதனால் வேகமாகக் குறைந்து வரும் நிலத்தடி நீர் மேலும் குறைவதற்கு வழி வகுக்கும். மேலும், பழையாற்றின் பெரும்பாலான தடுப்பு சட்டர்கள் பழுதடைந்துள்ளது. இதனால் தண்ணீர் வீணாகிக் கடலுக்குள் செல்கிறது. தவிர, நகரப்பகுதிகளில் உள்ள கழிவு நீர், நீர்நிலைகளில் கலப்பதாலும் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் குளங்கள், கால்வாய்களைப் பராமரிப்பதோடு, கழிவு நீர், நீர்நிலைகளில் கலப்பதையும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 12 May 2010 12:41:33 AM IST

திருக்கோவிலூர், மே 11: திருக்கோவிலூர் அருகே வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான திங்கள்கிழமை தொழில்நுட்பப் பயிற்சி (படம்) அளிக்கப்பட்டது.

÷திருக்கோவிலூரை அடுத்த மணம்பூண்டியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு வேளாண் வணிக துணை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) என்.தனவேல் தலைமை வகித்தார்.

÷மண்டல ஆராய்ச்சி நிலைய (பூச்சியியல்) இணை பேராசிரியர் என்.செல்வராஜீ, உதவி பேராசிரியர் பா.இந்திராகாந்தி, முகையூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வி.ஆறுமுகம், தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆர்.பாலகிருஷ்ணன், உதவி மேலாண்மை அலுவலர் பா.முத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டு தொழில் நுட்பம் குறித்து பேசினர்.

÷இப்பயிற்சியில் வேளாண் விளைப் பொருள்குழு உறுப்பினர்கள் மற்றும் நீர்ப்பாசன சங்கப் பிரநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு இம்மாத இறுதிக்குள் மழைக் காப்பீடு திட்ட இழப்பீடு**

First Published : 12 May 2010 12:43:24 AM IST

கடலூர், மே 11: கடலூர் மாவட்டத்தில் 2009-ம் ஆண்டு நெல் பயிரிட்டு பாதிக்கப்பட்ட  விவசாயிகளுக்கு, வர்ஷ பீமா மழைக்காப்பீடு திட்டத்தில் இழப்பீட்டுத் தொகை இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் அறிவித்தார்.

÷ஆட்சியர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:   வர்ஷ பீமா மழைக் காப்பீடு திட்டத்தை, 2009-ம் ஆண்டு மத்திய அரசு நிறுவனமான தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அமல்படுத்தியது. அந்த ஆண்டு பெய்த குறைந்த அளவு மழை, கூடுதல் மழை அளவு, வறண்ட தினங்கள் ஆகியவற்றைக் கணக்கிட்டு இழப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது.

÷அதன்படி 2009 ஆகஸ்ட் 15 முதல் டிசம்பர் 31 வரை மழை குறைந்த தினங்களைக் கணக்கிட்டும், செப்டம்பர் 15 முதல் நவம்பர் 15 வரை தொடர்ச்சியாக வறண்ட தினங்களைக் கணக்கிட்டும், செப்டம்பர் 15 முதல் ஜனவரி 31 வரை கூடுதல் மழை பெய்த தினங்களைக் கணக்கிட்டும் வட்டார வாரியாக இழப்பீடு கணக்கிடப்பட்டு உள்ளது.

÷அதன்படி கடலூர் மாவட்டத்தில் கீரப்பாளையம் வட்டாரத்துக்கு ஏக்கருக்கு ரூ.606, பரங்கிப்பேட்டைக்கு ரூ.563, நல்லூருக்கு ரூ.1593, மங்களூருக்கு ரூ.493, குறிஞ்சிப்பாடிக்கு ரூ.563, மேல்புவனகிரிக்கு ரூ.606, குமராட்சிக்கு ரூ.623, காட்டுமன்னார்கோயிலுக்கு ரூ.367, கம்மாபுரத்துக்கு ரூ.211 இழப்பீடாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

ஏனைய வட்டாரங்களுக்கு இத்திட்டத்தில் இழப்பீடு அறிவிக்கப்படவில்லை.

இம்மாத இறுதிக்குள் தகுதியுடைய அனைத்து விவசாயிகளுக்கும், காப்பீட்டு நிறுவனம் மூலம் இழப்பீட்டுத் தொகை வரைவேலையாக வழங்கப்படும் என்று செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

First Published : 12 May 2010 05:08:52 AM IST

வேலூர், மே 11: வேலூரில் 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு மாநில தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அனைத்துப் பணியாளர்கள் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நியாயவிலைக் கடை அங்காடிப் பணியாளர்களுக்கு புதிய ஊதியம் நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்டுள்ள ஊதியக் குழுவிடம் விரைவில் அறிக்கை பெற்று புதிய ஊதியத்தை அறிவிக்க வேண்டும். தற்போதுள்ள 5 ஆண்டு காலம் பணிநிறைவடையும் வரை தொகுப்பூதியம் என்பதை மாற்றி அனைவருக்கும் உடனடியாக காலமுறை ஊதியத்தை அனுமதிக்க வேண்டும். தகுதியுள்ள அங்காடிப் பணியாளர்கள் அனைவருக்குமŽ பதவி உயர்வு வழங்க வேண்டும். அங்காடி மற்றும் சங்கப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.சீனன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் பி.தர்மலிங்கம், மாவட்டப் பொருளாளர் பி.மாணிக்கம், மாவட்ட துணைத்தலைவர்கள் ஆர்.ரகுநாதன், எம்.ஆர்.லால்பகதூர், மாவட்ட இணைச்செயலாளர்கள் கே.பரசுராமன், டி.ரகுபதி கண்டன உரையாற்றினர்.

**விளைச்சல் குறைவு: மாம்பழக் கூழ் உற்பத்தி பாதிப்பு!**

First Published : 12 May 2010 03:08:38 AM IST



கிருஷ்ணகிரி, மே 11: நடப்பாண்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழ விளைச்சல் குறைந்துள்ளதால், மாம்பழக் கூழ் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

வழக்கத்தைவிட 20 சதவீதத்துக்கும் குறைவான அளவே விளைச்சல் உள்ளதாகக் கூறப்படுவதால், மாழ்பழக் கூழ் ஏற்றுமதியும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இதனால் அந்நியச் செலாவணி இழப்பு ஏற்படுவதோடு, ஆயிரக்கணக்கான பகுதி நேர தொழிலாளர்களுக்கு வேலை இழப்பும் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நாட்டிலேயே மாம்பழங்கள் கிருஷ்ணகிரியில்தான் அதிக அளவு விளைகின்றன..

பெங்களூரா, நீலம், ருமானி, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீட்டர், அல்போன்சா, மல்கோவா, சேலம் பெங்களூரா, ஜஹாங்கீர், இமாம்பசந்த் உள்ளிட்ட மா ரகங்கள் இங்கு சாகுபடி செய்யப்படுகின்றன. இம் மாவட்டத்தில் மாம்பழம் அதிக விளைவதால், அதைச் சார்ந்து சுமார் 53 மாம்பழக் கூழ் உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன.

நாட்டில் மொத்த மாம்பழக் கூழ் உற்பத்தியில் கிருஷ்ணகிரி மாவட்டம் 75 சதவீத பங்களிப்பை அளிக்கிறது. இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம், ரூ.250 கோடி அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

வழக்கமாக பனி பொழியும் மாதங்களான டிசம்பர், ஜனவரி மாதங்களில் மா மரங்கள் பூக்கள் பூக்கும் தன்மை கொண்டவை. ஆனால், பருவ மாற்றம் காரணமாக மா பூக்கள் சரியான நேரத்தில் பூக்கவில்லை.

மா பூக்கும் பருவத்தில் சீதோஷ்ண நிலை 10 டிகிரியாக இருக்க வேண்டும். ஆனால், நடப்புப் பருவத்தில் 15 டிகிரிக்கு குறையாமலேயே சீதோஷ்ண நிலை இருந்தது. மேலும், பருவ மழை குறித்த நேரத்தில் பெய்யாததால், பூக்கள் கருகின. பிஞ்சுகள் கடும் வெப்பத்தால் உதிர்ந்தன. இதனால், நடப்பாண்டில் வழக்கத்தைவிட, 20 சதவீதத்துக்கும் குறைவாகவே மாம்பழ விளைச்சல் இருக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் உள்ள மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் 2,20,000 ஆயிரம் டன் மாம்பழம் கொள்முதல் செய்யப்பட்டது. இதன்மூலம் 1,10,000 ஆயிரம் டன் மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு மாம்பழ வரத்து குறைந்துள்ளதால், மாம்பழக் கூழ் உற்பத்தியும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மே மாதத்தில் தொடங்கும் அரவைப் பணி இதுவரை தொடங்கப்படவில்லை. இதனால், மாம்பழ கூழ் அரவைப் பணி தொடங்க கால தாமதம் ஏற்படுவதால் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான பகுதி நேர தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட மாம்பழக் கூழ் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ஜி.வெங்கடசாமி கூறியது:

வழக்கமாக, மே மாதத்தில் தொடங்கப்படும் மாம்பழ அரவைப் பணி இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. இதனால், மாம்பழ கூழ் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

குஜராத், மைசூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து மாம்பழங்கள் இங்கு வந்தால் மட்டுமே, மாம்பழக் கூழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அரவை பணியைத் தொடங்கும் நிலை உள்ளது.

வழக்கமாக மாம்பழ அரவைப் பணி 90 நாள்கள் நடக்கும். இப்போது 50 நாள்கள் அரவைப் பணி நடக்குமா? என்பதே சந்தேகமாக உள்ளது என்றார்.

தினமலர்

**நெகமத்தில் கொப்பரை ஏலம்**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 32.10 ரூபாய் விலை கிடைத்தது.

நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 17 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 117 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் ஐந்து வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை

விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 41 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 31.40 ரூபாய் முதல், அதிகபட்சம் 32.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 76 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 24.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், 'தேங்காய் வரத்து அதிகரித்துள்ள நிலையில் கொப்பரை மார்க்கெட் விலை உயராததால் விவசாயிகள் இருப்பு வைத்துள்ளனர். வெளிமார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை 15 கிலோ டின்னுக்கு 740 ரூபாய் உள்ளதால், கொப்பரை மார்க்கெட் சூடு பிடித்துள்ளது. கடந்த வாரத்தை விட கொப்பரை கிலோவுக்கு 35 பைசா விலை அதிகமாக கிடைத்துள்ளது. அரசு கொப்பரை கொள்முதல் குடோன் வசதி இல்லாததால் மெதுவாக நடக்கிறது. அரசு கொள்முதல் அதிகரித்தால் ஏலத்திலும் கொப்பரை விலை உயரும்' என்றனர்.

**கோடை வெயிலால் சூடு பறக்கும் இளநீர் விலை!**

பேரூர் : கோவை, புறநகர், நகர் பகுதியில்இளநீர் விலை உயர்ந்துள்ளது. தேவை அதிகரித்திருப்பதால், கேரளாவிலிருந்தும் இளநீர் வரத்துவங்கியுள்ளன. கடந்த ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவுக்கு, கோடை வெயில் அதிகரித்துள்ளது. கோவை மாநகர், புறநகர் பகுதிகளில் இளநீர் வியாபாரம் நன்றாக உள்ளது. வெயிலின் உக்கிரத்தையடுத்து, இயற்கையாக கிடைக்கும் இளநீர் வாங்கி பருகி தாகம் தணித்துக் கொள்கின்றனர்.
புறநகர் பகுதிகளான பேரூர், தொண்டாமுத்தூர், ஆலாந்துறை, வடவள்ளி உள்ளிட்ட பகுதிகள் மற்றும் சிறுவாணி, மருதமலை மெயின்ரோடு பகுதிகளில், சில வாரங்களில் 50க்கு மேற்பட்ட புதிய இளநீர் கடைகள் முளைத்துள்ளன. புறநகரில் இரண்டு நாட்களுக்கு முன் வரை இளநீர் ஒன்று 12 ரூபாய்க்கு விற்றது. சிறிய அளவு இளநீர் 10 ரூபாய்க்கும் விற்பனையானது. தற்போது, பேரூர், தொண்டாமுத்தூர் பகுதிகளில் ஒரு இளநீர் 15 ரூபாயாக உயர்ந்துள்ளது.  மழை காலம் துவங்கினால், இளநீர் விலை குறைய வாய்ப்பு உள்ளது.  கடைகளில் விற்பனை செய்யும் குளிர்பானங்களை விட, இயற்கையான பானமாக இளநீர் இருப்பதால் இதற்கும் மவுசு அதிகரித்துள்ளது. இளநீர் விலை 15 ரூபாயாக உயர்ந்தாலும், பலர் விரும்பி வாங்கி குடிக்கின்றனர்.  பேரூர் இளநீர் வியாபாரி ஒருவர் கூறுகையில்,"தொண்டாமுத்தூர், ஆலாந்துறை பகுதி தோட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் இளநீர், சிறிய சைஸ் 8.50 ரூபாய், பெரிய சைஸ் 9.50 ரூபாய் விலை கொடுத்து, 10 ரூபாய், 12 ரூபாய்க்கு விற்று வந்தோம். இளநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால்,கேரளாவிலிருந்து கொண்டு வரப்படும் இளநீரை 12 ரூபாய்க்கும், 13ரூபாய்க்கு வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் 15, 16 ரூபாய்க்கு விற்கிறோம்," என்றார்.

**தக்காளி விலை கிலோ ரூ.30: பெண்கள் கடும் அதிர்ச்சி**

ஈரோடு: ஈரோடு மார்க்கெட்டில் தக்காளி விலை 'கிடுகிடு' உயர்வால் பொதுமக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஒரு கிலோ தக்காளி 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் பரவலாக தக்காளி, வெண்டை, புடலை, அவரை உள்ளிட்ட காய்கறிகள் பயிரிடப்படுகிறது. நடப்பாண்டில் கணிசமாக மழை பெய்தபோதிலும், மே மாத அக்னி வெயிலால் ஈரோடு மாவட்ட விளை நிலங்கள் வறண்ட நிலையில் காணப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் விளைச்சலாகும் காய்கறிகள் நேதாஜி மார்க்கெட்டில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் விளைச்சலாகும், காய்கறி போதுமானதாக இல்லை என்பதால், தர்மபுரி, தேன்கனிக்கோட்டை, திருச்சி, ஊட்டி, கொடைக்கானல், பெங்களூரு பகுதியில் இருந்து காய்கறி வரவழைக்கப்படுகிறது. சில மாதங்களாக தமிழகம் முழுவதும்

போதுமான அளவு மழை பெய்யாததாலும், தற்போதைய அக்னி வெயிலாலும் காய்கறி உற்பத்தி பெருமளவு குறைந்து விட்டது. குறிப்பாக தக்காளி விளைச்சல் மிகவும் குறைந்து விட்டது. சில வாரங்களுக்கு முன் ஒரு கிலோ தக்காளி ஏழு ரூபாய்க்கு விற்கப்பட்டது.

தக்காளி வரத்து படிப்படியாக குறைந்ததால் விலை அதிகரிக்க துவங்கியது. இரு வாரங்களுக்கு முன் தக்காளி 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த வாரத்தில் 25 ஆக உயர்ந்தது. அவ்விலை மீண்டும் அதிகரித்து இரு நாட்களுக்கு முன் 30 ரூபாயாக உயர்ந்துள்ளது. விலை உயர்வால் பொதுமக்கள் பலர் தக்காளி பயன்படுத்துவதை குறைக்க துவங்கி விட்டனர். தக்காளியில் பெங்களூரு, கிராஸ் ஆகிய ரகங்கள் 25 ரூபாய் முதல் 28 ரூபாய், நாட்டு தக்காளி 30 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஈரோடு மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து மிகவும் குறைந்து விட்டதால் விலை அதிகரித்துள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்தும், அந்தியூர், தாராபுரம் பகுதியில் இருந்தும் தக்காளி வரத்து குறைந்தே வருகிறது. தற்போது வரும் தக்காளியின் தரம் நன்றாகவும் இல்லை. வெயிலில் வாடிய பழங்களே அதிகம் வருகிறது. மூன்று வாரங்களுக்கு முன் ஒரு கிலோ தக்காளி ஏழு ரூபாயாகவும், அதைத்தொடர்ந்து ஒரு கிலோ 15 ரூபாயாகவும் உயர்ந்தது. விலை மேலும் அதிகரித்து ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தக்காளி வரத்து தொடர்ந்து குறைந்து கொண்டே செல்வதால் மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. சென்றாண்டில் ஒரு கிலோ 40 முதல் 50 ரூபாய் வரை விற்கப்பட்டது. நடப்பாண்டில் அதையும் தாண்ட வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**'கோழிக்கொண்டை பூ' சாகுபடி அதிகரிப்பு**

கோபிசெட்டிபாளையம்: திருமண சீஸனை முன்னிட்டு கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் 'கோழிக்கொண்டை' பூ சாகுபடி அதிகரித்துள்ளது. திருமணம் உள்ளிட்ட சுபவிசேஷ காலம் பங்குனி முதலே ஆரம்பமானது. தொடர்ந்து வைகாசி, ஆனி மாதங்கள் வரை நிறைய சுப முகூர்த்த தினங்கள் உள்ளன. ஆடி மாதங்களில் கிராமப்பகுதிகளில் அம்மன் கோவில்களில் அதிகளவில் திருவிழாக்கள் நடப்பது வழக்கம். இதை தொடர்ந்து ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களிலும் திருமணம் உள்ளிட்ட சுபவிஷேசங்கள் ஏராளமாக நடக்கும். சுபவிஷேசங்களுக்கு தேவையான மல்லிகை, கனகாம்பரம், சம்பங்கி உள்ளிட்ட பூ வகைகளுக்கு அதிக கிராக்கி ஏற்படும். கோவில்கள் மற்றும் அம்மன் திருவுருவச் சிலைகளுக்கு மஞ்சள் சாமந்தி, சிவப்பு சாமந்தி மற்றும் கோழிக்கொண்டை பூக்கள் தேவை அதிகரிக்கும். வரும் மாதங்களில் திருமணம், கோவில் திருவிழாக்கள் தொடர்ந்து நடக்க உள்ளதால், விவசாயிகள் மல்லிகை, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்களை அதிகம் பயிரிடத் துவங்கியுள்ளனர். மாலைகளுக்கு பயன்படுத்தப்படும் வாடாத தன்மை கொண்ட கோழிக்கொண்டை பூக்களையும் விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.
கோபியை அடுத்த கடத்தூர், வெட்டையம்பாளையம், மாக்கினாங்கோம்பை, குருமந்தூர், சாணர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கோழிக்கொண்டை பூக்கள் அதிகளவில் பயிராகியுள்ளது. பங்குனி மாதம் ஒரு கிலோ கோழிக்கொண்டை பூ 40 முதல் 60 ரூபாய் வரை விற்றது. தற்போது 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. திருமணம், திருவிழா உள்ளிட்ட பல்வேறு சுபவிசேஷங்கள் தொடர்ந்து நடக்க உள்ளதால், கோழிக்கொண்டை பூக்களின் விலை அதிகரிக்க கூடும் என விவசாயிகள் மகிழ்ச்சியில் காத்திருக்கின்றனர்.

**சாலையோரம் நிழல் தரும் மரங்கள் வளர்க்க பூமி வெப்பமயமாதலை தடுக்க நடவடிக்கை**

மதுரை: பூமி வெப்பமயமாதலை தடுக்கும் நடவடிக்கையாக நெடுஞ்சாலைகளின் இருபுறமும் நிழல் தரும் மரங்களை வளர்க்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 100 மரங்களை நடவு செய்து, நெடுஞ்சாலைத்துறையினர் பராமரித்து வருகின்றனர்.ஆங்கிலேயர் காலத்தில் சாலையோரங்களில் பலன் தரும் மரங்கள் வளர்க்கப்பட்டன. மரங்கள் சூழ்ந்துள்ள சாலையில் செல்லும் போது வெப்பம் தெரியாது. நூறாண்டு பழமையான மரங்கள் தூர்ந்து போனதால் வெட்டப்பட்டன. நான்கு வழிச்சாலை உருவாக்கத்தின் போதும் ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டன. அவற்றிற்கு பதிலாக புதிய மரங்களை சாலையோரங்களில் வளர்க்கவில்லை. இதனால், சாலையில் செல்லும்போது வெப்பத்தின் தாக்கம் அதிகளவு உள்ளது.முன்மாதிரி கிராமம்: மதுரை மாவட்டம் சோளங்குருணி கிராமத்தில் ஆங்கிலேயர் காலத்தில் வளர்க்கப்பட்ட புளிய மரங்கள் பட்டுப்போயின. அவற்றிற்கு பதிலாக பலன் தரும் புளிய மரங்களை கிராம மக்கள் வளர்த்தனர். முறைவைத்து மரங் களை பராமரித்து வருகின்றனர். இதில் இருந்து ஆண்டு தோறும் கிடைக்கும் புளியை ஏலம் விடுவதன் மூலம் கிடைக்கும் நிதியை, கிராம வளர்ச்சி திட்டங்களுக்கு செலவிடுகின்றனர். சாலையோரம் வளர்க்கப்படும் மரங்கள் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானது.

எனினும், சோளங்குருணி கிராம மக்களின் ஒற்றுமை, உழைப்பை கருத்தில் கொண்டு மரங்களை பராமரிக்கும் பொறுப்பை அவர்களிடமே நெடுஞ்சாலைத்துறையினர் ஒப்படைத்துள்ளனர்.மரம் வளர்க்க உத்தரவு:மரம் வளர்ப்பில் முன்மாதிரியாக திகழும் சோளங்குருணி கிராமத்தைப் போல், சாலையோரங்களில் நிழல் தரும் மரங்களை வளர்க்க நெடுஞ்சாலைத்துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. முதற்கட்டமாக மதுரை - நத்தம் சாலையின் இருபுறமும் 100 எண்ணிக்கையில் புங்கன், புளியன், வேப்ப மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மரக்கன்றுகளை கால்நடைகள் மேய்ந்து விடாமல் இருக்க, முள்வேலி அமைக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து மூன்று மாதங்கள் மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றி பராமரிக்கப்படுகிறது. 100 மரக்கன்றுகள் நன்கு வளர்ச்சியடைந்ததும் அடுத்ததாக 100 மரக் கன்றுகள் நடப்படும். மரக்கன்றுக்கு சேதம் விளைப்போர் அல்லது கால்நடைகளை மேயவிடுவோர் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள் ளது. பூமி வெப்பமயமாதலை தடுக்கும் வகையில் அரசு எடுத்துள்ள இம்முயற்சியும், அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பதும் பாராட்டுக்குரியது

**பருத்திக்கு பதில் நெல், காய்கறி சாகுபடி மதுரையில் மாறிவரும் விவசாயம்**

மதுரை: மதுரை மாவட்டம் செல்லம்பட்டி, சேடபட்டி வட்டாரங்களில் சில ஆண்டுகளாக கோடை கால விவசாயம் மாறி வருகிறது. பருத்தி அதிகளவு பயிரிட்ட காலம் போய், நெல், காய்கறிகள், மக்காச்சோளம் போன்றவை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.மதுரை மாவட்டத்தில் கோடை காலத்தில் செல்லம்பட்டி, சேடபட்டி, உசிலம்பட்டி, விக்கிரமங்கலம் பகுதியில் பருத்தி அதிகளவு பயிரிடப்படும். கடந்த சில ஆண்டுகளாக பருத்தி சாகுபடி குறைந்து மாற்றுப் பயிராக நெல், மக்காச்சோளம், காய்கறிகள் அதிகம் பயிராகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. செல்லம்பட்டி பகுதியில் நிலத்தடி நீரை நம்பியே, தற்போது ஆயிரம் எக்டேருக்கு மேல் நெல் பயிரிடப்படுகிறது. பருத்தியில் நிலையற்ற மகசூல், பூச்சித் தாக்குதல், கூலியாட்கள் கிடைக்காதது இதற்கு காரணம். பருத்திக்கு பதிலாக சாகுபடி செய்யும் பயிருக்கு கோடையில் நல்ல மகசூலும், விலையும் தொடர்ச்சியாக கிடைக்கிறது. விவசாயிகளின் ஆர்வத்திற்கேற்ப துறை அதிகாரிகளும் இந்த

ஆண்டு பயறு வகைகளை அதிகம் சாகுபடி செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இந்த சாகுபடிக்கு தேவையான சான்றுபெற்ற விதை, நுண்ணுயிர் உரங்கள், பூக்கும் பருவத்தில் தெளிப்பதற்கான டி.ஏ.பி., உரம் போன்றவற்றை மானிய விலையில் வினியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது. விவசாயத் துறை இணை இயக்குனர் சங்கரலிங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

விவசாயத் துறை துணை இயக்குனர் எஸ்.சேவுகப் பெருமாள் கூறியதாவது:மாற்றுப் பயிராக பயறு வகைகளை சாகுபடி செய்தால் நல்லது. இதற்காக இந்த ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயறு வகைக்கான திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். பயறு வகைகள் ஒரு கிலோவுக்கு ரூ. 60 முதல் 65 வரை விற்பனையாகிறது. இதனால் ஒரு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வரை வருமானம் பெற வாய்ப்புள்ளது. அதற்கு ரூ. 5000ம் தான் செலவாகிறது. எனவே பயறு சாகுபடி செய்வோருக்கு விதை, இடுபொருள் மானிய விலையில் வழங்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளோம். இதுதொடர் பான விபரங்களை அந்தந்த பகுதி உதவி இயக்குனரிடம் அறிந்து கொள்ளலாம் என்றார்.

**அரிசி விலை மாற்றம் இல்லை**

மதுரை: மதுரைக்கு நெல் வரத்து குறைந்ததால், இரு வாரங்களுக்கு முன், சில அரிசி ரகங்களின் விலை கிலோவிற்கு 50 காசு முதல் ஒரு ரூபாய் வரை அதிகரித்தது. இதுவரை விலையில் மாற்றம் ஏற்படவில்லை.அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது : கர்நாடக பொன்னி பழசு 38 ரூபாய், புதுசு 29, டீலக்ஸ் பொன்னி பழசு 32, புதுசு 25 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெள்ளை பொன்னி பழசு 35, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23, புதுசு 20லிருந்து 21க்கும் விற்கப்பட்டது. ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 22, ஐ.ஆர். 36 பழசு 22, புதுசு 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 29, மாவு பச்சரிசி பழசு 21,பிரியாணி அரிசி முதல் ரகம் 52, அடுத்த ரகம் 51, 49 ரூபாய்க்கும், புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது, என்றார்.

**மானிய விலையில் ஜிப்சம் உரம்**

கொட்டாம்பட்டி: கொட்டாம்பட்டி வேளாண் அலுவலகத்தில் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் உரம் வழங்கப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் செல்வன் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது, நிலக்கடலை உற்பத்திக்கு ஜிப்சம் இடுவது மிகவும் அவசியம். இதில் உள்ள சுண்ணாம்புச் சத்து காய்கள் திரட்சியாகவும், கந்தகச்சத்து எண்ணெய் சத்தை அதிகரிக்கவும் செய்கிறது. எனவே ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 80 கிலோ ஜிப்சமும், மேலுரமாக விதைத்த 40 முதல் 45 நாட்களுக்குள் 80 கிலோ ஜிப்சம் இட்டு செடிகளை சுற்றி மண் அணைக்க வேண்டும். கொட்டாம் பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் வழங்கப்படுகிறது. கடலை பயிரிடும் விவசாயிகள் அனைவரும் வாங்கி பயனடையலாம், என்றார்.

**மல்லிகை விலை உயரும்**

மதுரை: மதுரையில் முகூர்த்த நாட்களையொட்டி, மல்லிகை பூக்கள் விலை அதிகரிக்க உள்ளது.மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறுகையில், "நேற்று ஒரு கிலோ மல்லிகை 50-70 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அடுத்த

வாரம் மேலும் விலை கூடும். கனகாம்பரம் 150 ரூபாய், ரோஜா 50, மரிக்கொழுந்து 30, சம்பங்கி 50, வாடாமல்லி 30, கோழிக்கொண்டை 30, செண்டுப்பூ 40, அரளி 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது," என்றார்.

**மாம்பழ விற்பனை ஜோர்**

மதுரை: மதுரையில் மாம்பழ சீசன் களை கட்டிவருவதை தொடர்ந்து, விற்பனை 'சூடு' பிடித்துள்ளது.யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது : மாம்பழ வகைகளில் ஒரு கிலோ சப்பட்டை 50-60 ரூபாய், இமாம்பசந்த் 80, பாலாமணி 40, காதர் 40, மல்கோவா 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பன்னீர் திராட்சை 40 ரூபாய், காபூல் மாதுளை 160, சீட்லெஸ் 110, வாஷிங்டன் ஆப்பிள் 130, நியூசிலாந்து 140, நாக்பூர் ஆரஞ்சு 80, பப்பாளி 15, அன்னாசி 30, சாத்துக்குடி 30, பேரிக்காய் 80, ஆஸி., கிரேப் 200, துரியன் பழம் 300, சப்போட்டா 20, கிர்னிப்பழம் 30, மலைவாழை ஒன்று 3.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**பாமாயில் விலை உயர்வு**

மதுரை: மதுரையில் மீண்டும் பாமாயில் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் 635 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின், நேற்று 645 ரூபாய்க்கு விற்கப் பட்டது.
எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறுகையில், "ரைஸ்பிரான் ஆயில் 15 கிலோ டின் 635 ரூபாய், கடலை எண்ணெய் 1040, சூரியகாந்தி எண்ணெய் 780, தேங்காய் எண்ணெய் 950, வனஸ்பதி 700, நல்லெண் ணெய் 1250, தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாய் என்பதில் மாற்றமில்லை," என்றார்.

**செர்ரி பழம்! கலப்படத்தில் இது 'கலர்ஃபுல்'**

ஆத்தூர்: பேக்கரி, ஸ்வீட்ஸ் கடைகளில் 'செர்ரி' பழம் என கூறி, சாயம் கலந்த பப்பாளி காய்களை பதப்படுத்தி சிறு சிறு துண்டுகளாக விற்பனை செய்து வருவது ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், தம்மம்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம் போன்ற பகுதிகளில் பேக்கரி, ஸ்வீட்ஸ், ஹோட்டல், மளிகை கடைகள் அதிகளவில் உள்ளன. ஆத்தூர் நகர பகுதியில் 20க்கும் மேற்பட்ட பேக்கரி, ஸ்வீட்ஸ் கடைகள் இருக்கின்றன.
இந்த கடைகளில் பிஸ்கெட், பிரட், ஸ்நாக்ஸ், கேக், இனிப்பு வகைகளை தயாரிக்கின்றனர். பிறந்த நாள் கேக், பண்டிகை ௦ல இனிப்பு வகைகள் அதிகளவில் விற்பனையாகின்றன. அவ்வாறு தயாரிக்கப்படும் கேக், பிரட் போன்றவற்றில் எசன்ஸ், சாயம் கலந்த பவுடர்களும், பதப்படுத்தி கலர் பூசிய பப்பாளி காய் தூள்களை செர்ரி பழமாகவும், தரம் குறைந்த உணவு பொருட்களையும் கலந்து விற்பனை செய்வதாக கூறப்படுகிறது. அதேபோல் ஹோட்டல், மளிகை கடைகளில் தரம் குறைந்த உணவு பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். தமிழக அரசின் உத்தரவின்பேரில் ஹோட்டல்கள், கடைகளில் காலாவதியான,தரமற்ற பொருட்கள் உள்ளதா, விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து சுகாதாரத்துறையினர் ஆய்வு நடத்தி வருகின்றனர். அதே வகையில் ஆத்தூர் பகுதியில் ஆய்வு நடத்தப்பட்டபோது, பப்பாளி காய்களை பதப்படுத்தி சிறு சிறு துண்டுகளாக செர்ரி பழமாக பயன்படுத்தியது தெரியவந்தது. ஹோட்டல், பேக்கரி உணவு தயாரிப்புகள் விஷமாக இருப்பதையறிந்து அலுவலர்கள் அதிர்ச்சியடைந்தனர். பொதுமக்களுக்கோ எந்த கடை பொருள்தான் தரமானது என்ற சந்தேகமும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது. எனவே தரமற்ற முறையில் தயாரித்து விற்பனை செய்பவர்கள், காலாவதி பொருட்களை விற்பனை செய்வோர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தரமற்ற உணவுப்பொருட்கள்: தம்மம்பட்டி பகுதியில் காலாவதியான, தரமற்ற உணவு பொருட்களை விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை மேற்கொள்ள தயக்கம் காட்டி வருவதாக புகார் எழுந்துள்ளது. தம்மம்பட்டி டவுன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட உடையார்பாளையம், பஸ் ஸ்டாண்ட் வளாகம், கடைவீதி மற்றும் நடுவீதி உள்ளிட்ட பகுதிகளில் வணிக வளாகங்கள், வர்த்தக நிறுவனங்கள், ஹோட்டல், 'டீ' கடை, பெட்டிகடை, கசாப் (மாமிசம் விற்பனை) கடை, மருந்துகடைகள் உள்ளன. கடைகளில் விற்பனை செய்யும் மளிகை பொருட்களில், எடை, பொருள் பெயர், 'பேக்கிங்' மற்றும் காலாவதியாகும் காலம் உள்ளிட்ட விவரங்கள் குறிப்பிட வேண்டும். பெரும்பாலான கடைகளில் தரமற்ற பொருட்களையே விற்பனை செய்கின்றனர். மொத்த விற்பனை நிலையத்தில் விற்கும் தேங்காய் எண்ணையில் உள்ளூர் எண்ணை கலந்தும், நல்லெண்ணையில் தவிடு எண்ணை கலந்தும் விற்பனை செய்யப்படுகிறது. பிரபலமான கம்பெனி பெயரில் ரஸ்னா, மோர் பாக்கெட், தண்ணீர் பாக்கெட், பிஸ்கெட்டுகள் விற்கப்படுகின்றன. காலாவதி பொருட்கள் குறித்து ஆய்வு செய்ய அரசு உத்தரவிட்டும், தம்மம்பட்டி பகுதி கடைகளில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு செய்யாமல் 'அலட்சியம்' காட்டி வருகின்றனர். எனவே தம்மம்பட்டி பகுதி கடைகளில் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**வெல்லம் விலை உயர்வால் தொழிலாளர் குஷி 'மாமூல்' வாழ்க்கை பாதிப்பால் போலீஸ் விரக்தி**

நங்கவள்ளி: பனை வெல்லம் விலை உயர்ந்துள்ளதால், கள் இறக்குவதற்கு பதிலாக பெரும்பாலான தொழிலாளர்கள் பனை வெல்லம் காய்ச்சி விற்பனை செய்ய துவங்கி விட்டனர். மாமூல் வாழ்க்கை பாதித்ததால் கிராமப்புற ஸ்டேஷன் போலீஸார் விரக்தியடைந்துள்ளனர். சேலம் மாவட்டம் தாரமங்கலம், நங்கவள்ளி, கொளத்தூர், பனமரத்துப்பட்டி, எடப்பாடி பகுதிகளில் பனை மரங்கள் அதிக அளவில் உள்ளது. கோடைகாலம் துவங்கி விட்டால் பனை மரத்தில் பதநீர், நுங்கு உற்பத்தியாகும். தொழிலாளிகள் இறக்கி பொதுமக்களுக்கு விற்பனை செய்வர். ஃபிப்ரவரி முதல் ஜூன் வரை பதநீர் சீஸன் இருக்கும். பதநீர் இறக்குவதை விட கள் இறக்கி விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்பதால், சேலம் மாவட்டத்தில் பனை தொழிலாளர்கள் பலர் சட்டவிரோதமாக கள் இறக்கி விற்பனை செய்ய துவங்கினர். தொழிலாளர்களிடம் முன்வைப்பு தொகை, மாத கட்டணம் என போலீஸார் மாமூல் வசூல் செய்ததால் கள் விற்பனையை கண்டு கொள்ளவில்லை. இந்நிலையில் கோவையில் நடக்கும் உலக தமிழ் செம்மொழி மாநாட்டை முன்னிட்டு தமிழ்நாடு கள் இயக்கள் ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி, கள் இறக்கும் போராட்டம் நடத்த போவதாக தெரிவித்தார். அதை தொடர்ந்து எந்த ஒரு போலீஸ் ஸ்டேஷன் எல்லைக்குள்ளும் கள் இறக்க கூடாது. இறக்குவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் போலீஸாருக்கு அதிகாரிகள் உத்தரவிட்டனர். பெரும்பாலான இடங்களில் கள் இறக்கி விற்பது முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டது. எனவே, பனை தொழிலாளர்கள் கள் இறக்குவதற்கு பதிலாக பதநீர் இறக்கி வெல்லமாக தயாரித்து விற்க துவங்கினர். அதன் பின்னரே வெல்லம் தயாரிப்பது மூலம் அதிக வருவாய் கிடைப்பது தாழிலாளர்களுக்கு தெரியவந்தது. இதுகுறித்து தாரமங்கலம் பகுதியை சேர்ந்த பனை தொழிலாளர்கள் சிலர் கூறியதாவது:

கள் இறக்குவதை சட்டபூர்வமாக்கினால், கள் விற்பனை செய்யலாம். ஆனால், அரசு அனுமதி வழங்காத நிலையில் எதற்காக கள் இறக்க வேண்டும். சட்டத்தை மீறி கள் இறக்குவதற்காக பனைமரம் வைத்திருக்கும் விவசாயிக்கு மாத வாடகை 250 ரூபாய் தர வேண்டும். அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷன், மதுவிலக்கு அமலாக்க பிரிவு ஸ்டேஷன் போலீஸார் முன்பணம் மட்டும் 1,000 முதல் 2,000 ரூபாய் வரை மறைமுகமாக வசூல் செய்கின்றனர். தவிர வாரம் தோறும் ஸ்டேஷனுக்கு 300 முதல் 600 ரூபாய் வரை தர வேண்டும். அவ்வப்போது போடும் வழக்குகளுக்கு பணம்

செலவழிக்க வேண்டும். அதன் பிறகே லாபம் பார்க்க முடியும். ஆனால், பனைவெல்லம் காய்ச்சி விற்பனை செய்தால் யாருக்கும் மாமூல் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. தற்போது வியாபாரிகள் ஒரு கிலோ பனைவெல்லத்தை 55 முதல் 60 ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர்.

பத்து லிட்டர் கள் விற்றால் 200 ரூபாய் கிடைக்கும். மாமூல் கொடுக்கும் தொகையை கணக்கு பார்த்தால், எல்லாம் போக 50 ரூபாய் மட்டுமே மிஞ்சும். ஆனால் பத்து லிட்டர் பதநீரில் ஒரு கிலோ வெல்லம் தயாரிப்பதன் மூலம் 60 ரூபாய் வருவாய் கிடைக்கிறது. பனை வெல்லம் காய்ச்சினால் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் பகுதியில் பெரும்பாலான தொழிலாளர்கள் பனைவெல்லம் தயாரிப்புக்கு மாறி விட்டனர், என்றனர்.
பனை தொழிலாளர்கள் சமீபகாலமாக வெல்லம் தயாரிப்புக்கு மாறியது, மாமூல் வாழ்க்கை பாதிப்பது கிராமப்புற ஸ்டேஷன் போலீஸார் பலரையும் விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

**வெற்றிலையில் வாடல் நோய் கட்டுப்படுத்த வழிமுறைகள்**

தேவதானப்பட்டி: பெரியகுளம் ஒன்றியத்தில் பயிடப்பட்டுள்ள வெற்றிலையில் காணப்படும் வாடல் நோயை கட்டப்படுத்த தோட்டக்கலைத்துறை ஆலோசனை கூறியுள்ளது. பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, மேல்மங்கலம், கீழவடகரை, தெய்வேந்திரபுரம், தாமரைக்குளம் ஆகிய கிராமங்களில் வெற்றிலை பயிடப்பட்டுள்ளது. வெற்றிலை வயல்களில் வேர்அழுகல், வாடல், இலை அழுகல், விதைப்புக் கொடி அழுகல், தீய்ச்சல், மேல்சாம்பல் நோய்கள் மற்றும் பூசம, பாக்டீரியா நோய்கள் அதிகமாக காணப்படுகின்றன. இந்நோய்களினால் அதிகமா பாதிப்பு ஏற்படுகிறது. வாடல் நோயை தாங்கக் கூடிய சிறுகமணி ஒன்று என்ற ரகத்தை பயிரிட வேண்டும். நோய் தாக்காத வயல்களில் விதைக் கொடிகளை தேர்வு செய்து நடவு செய்ய வேண்டும். விதைக் கொடிகளை நடவு செய்வதற்கு முன்பாக 0.25 சத போர்டோ மருந்து கலவையில் 5 நிமிடம் ஊற வைத்து நடவு செய்ய வேண்டும். டிரைக்கோடெர்மா விரிடி எனும் கதிர் பூசனத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் பத்து வேப்பம் புண்ணாக்குடன் கலக்க வேண்டும். சமச்சீர் உரமிட வேண்டும். நோய் தாக்கிய வயல்களில் இருந்து நீரை மற்ற வயல்களுக்கு பாய்ச்சக் கூடாது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெற்றிலை சாகுபடி நிலத்தை மாற்ற வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை நடவடிக்கைகள் மூலம் வெற்றிலையில் வாடல் நோயை கட்டுப்படுத்தலாம் என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முத்தையா கூறியுள்ளார்.

**'உளுந்து விதைப்பு செய்து நல்ல மகசூல் பெறுங்கள்' விவசாயிகளுக்கு வேளாண் துறை யோசனை**

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் நடப்பு மாதம் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி நஞ்சை தரிசு நிலங்களிலும் தோட்டக்கால் பகுதியிலும் உளுந்து விதைப்பு செய்து நல்ல மகசூல் பெற்று பயனடையுமாறு விவசாயிகளுக்கு வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

நடப்பு பருவத்தில் குறுகிய கால உளுந்து ரகமான உளுந்து டி9 விதைப்பு செய்வதன் மூலம் ஏக்கருக்கு சுமார் 600 முதல் 700 கிலோ மகசூல் பெற்று குறைந்த செலவில் நிறைந்த லாபம் பெற முடியும். உளுந்து சாகுபடி செய்வதால் மண்ணின் வளம் அதிகரித்து வரும் குறுவைப் பருவத்தில் நெல் சாகுபடியில் நல்ல மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்கு உளுந்து டி9 விதை 10 கிலோவை டி.விரிடி உயிரியல் பூசன கொல்லி மருந்து 40 கிராம் மற்றும் ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா ஒரு பொட்டலம் வீதம் கலந்து விதைநேர்த்தி செய்து விதைப்பு செய்யலாம். அடியுரமாக ஏக்கருக்கு

22 கிலோ யூரியா மற்றும் சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ இடவும்.தேவையான உளுந்து டி9 விதைகள் வேளாண் விரிவாக்க மையத்தில் மான்ய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. உயிர் உரங்கள் டி.விரிடி ஆகியவையும் தேவையான அளவு இருப்பில் உள்ளது என்று மண்ணச்சநல்லூர் வேளாண் உதவி இயக்குநர்(பொ) ரங்கராசன் தெரிவித்துள்ளார்.

**உழவர் சந்தைகள் மூலம் விலைவாசி உயர்வு:கட்டுப்படுத்தப்பட்டது: எம்.எல்.ஏ. பெருமிதம்**

திருவண்ணாமலை:'உழவர்சந்தைகள் மூலம் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது' என எம் எல்ஏ பிச்சாண்டி பேசினார்.தி.மலை உழவர் சந்தையில் 102 கடைகள் உள்ளன. இங்கு கடை வைத்துள்ள விவசாயிகளுக்கு மின்னணு எடைத்தராசு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் சம்பத் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் லட்சுமபதி முன் னிலை வகித்தார்.

இதில், எம்.எல்.ஏ., பிச் சாண்டி கலந்துகொண்டு ரூ. 2 லட்சம் மதிப்புள்ள மின் னணு எடைத்தராசுகளை 50 விவசாயிகளுக்கு வழங்கி பேசியதாவது:கடந்தஆட்சியில் மாநிலத் தில் பல உழவர் சந்தைகள் மூடப்பட்டபோது, இந்த சந்தை மூடவில்லை. விவசாயம் நிறைந்த இந்த மாவட் டத்தில் விவசாயிகளின் வளர்ச்சிக்கு உழவர் சந்தை உறுதுணையாக உள்ளது. மேலும் உழவர்சந்தை மூலம் விலைவாசி உயர்வு கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இங்கு மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி பொதுமக்கள் பாதிக் கப்படுகிறார்கள். இந்த நிலையை போக்க, தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 5 லட்சம் மதிப்பீட்டில் சிமென்ட் தளம் அமைக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

**பீட்ரூட் கொள்முதல் விலை உயர்வு**

பல்லடம் : பீட்ரூட் கொள்முதல் விலை கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்ந்துள்ளது; பல்லடம் பகுதி பீட்ரூட் விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.
பல்லடம் பகுதியில் செலக்கரிச்சல், வாரப்பட்டி, ஜல்லிப்பட்டி, சுல்தான்பேட்டை, தாசநாயக்கன் பாளையம், மந்திரிபாளையம், கரடிவாவி, குண்டடம் உட்பட பல இடங்களில் 2,000 ஏக்கர் பரப்பளவில் பீட்ரூட் சாகுபடி செய்யப்பட் டுள்ளது. 80 நாளில், அறுவடைக்கு வரும் பீட்ரூட் ஒரு ஏக்கர் சாகுபடி முதல் அறுவடைசெய்யும் வரை விவசாயிகளுக்கு, 2  ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. அறுவடை செய்யப்படும் பீட்ரூட், திருப்பூர் ற்றும் கோவை, கேரளா பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.
பல்லடம் பகுதியில் ஒரு மாதமாக அடித்து வரும் கடும் வெயிலால், பீட்ரூட் மகசூல் வழக்கத்தை விட, ஏக்கருக்கு 25 சதவீதம் வரை குறைந்துள்ளது. விளைச்சல் குறைந்துள்ள நிலையில், தேவையில் எவ்விதமான குறைவும் ஏற்படாததால், பீட்ரூட் களுக்கு கோவை, திருப்பூர்  மார்க்கெட்டில் தொடர்ந்து 'கிராக்கி' ஏற்பட்டுள்ளது.
இதன் காரணமாக, கடந்த மாதம் ஒரு கிலோ ஏழு ரூபாய்க்கு இப்பகுதி விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட பீட்ரூட், தற்போது கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்ந்துள்ளது. விளைச்சல் குறைந் துள்ள நிலையில், கட்டுப்படியாகும் அளவுக்கு, கொள்முதல் விலை <உயர்வு பல்லடம் பகுதி விவசாயிகளை உற்சாகம் அடையச் செய்துள்ளது.

**பதநீர் விற்பனை ஜரூர்**

பொங்கலூர் : ரோட்டோரங்களில் விற்கப்படும் பதநீரை குடிக்க, மக்கள் கூட்டம் அலைமோதுவதால்  விற்பனை சூடுபிடித்துள்ளது.தற்போது கோடை வெயில் வாட்டி எடுக்கிறது. இதனால், ரோட்டில் செல்லும் வாகன ஓட்டிகள்

மிகவும் களைப்படைகின்றனர். இவர்களின் தேவையை நன்கு புரிந்து கொண்ட நடைபாதை வியாபாரிகள், பதநீர் விற்பனையில் ஈடுபடுகின்றனர்.பதநீர், மதுரை போன்ற தென்மாவட்டங்களில் இருந்து ஆட்டோ, வேன் உள்ளிட்ட வாகனங்கள் மூலம் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இவற்றை ரோட்டோர வியாபாரிகள் வாங்கி விற்பனை செய்கின்றனர்.கிராமப்புறங்களில் உள்ள சில மரம் ஏறும் தொழிலாளர்களும் பதநீரை நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.ஒரு லிட்டர் பதநீர் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கொண்டு வந்த சில மணி நேரங்களிலேயே விற்றுவிடுகிறது. உடல் நலத்திற்கு நல்லது என்பதாலும், இயற்கையாய் கிடைக்கும் பானம் என்பதாலும் மக்கள் விரும்பி ருந்துகின்றனர். சிலர் லிட்டர் கணக்கில் வீடுகளுக்கு வாங்கிச் செல்கின்றனர்.

**நவீன தொழில்நுட்பம்**

மே 10,2010,16:00 IST

ஆன்ட்டி ஆக்சிடென்ட்ஸ்: திசுக்கள் சேதமடைவதைத் தடுத்து நோய்களை குணமாக்கி இளமையை பாதுகாக்கும் உயிர்ச்சத்துக்கள் ஆகும். செல்களை சிதைத்து நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனமாக்கும் ப்ரீரேடிக்கல் என்ற நச்சுப் பொருளை வெளியேற்றுவதே இதன் முதன்மையான வேலையாகும்.

ஆக்சிஜனை பயன்படுத்தும் எல்லா உயிரினங்களிலும் ப்ரீரேடிக்கல் உற்பத்தி செய்யப்படுகிறது. வளர்சிதை மாற்றத்தின் போதும், வேலை, பயம், அழுத்தமான மனநிலை, பொறாமை போன்ற எதிர் மறையான மன நிலைகளிலும் ப்ரீ ரேடிக்கல் மிக அதிகமாக உற்பத்தியாகிறது. இந்த மூலக் கூறு மிக விரைந்து செயல்பட்டு குறைவுபட்ட எலக்ட்ரான் பூர்த்தியாகும்வரையில் அருகில் உள்ள திசுக்களை சிதைத்து அதிலுள்ள எலக்ட்ரான்களை எடுத்துக் கொள்ளும். எலக்ட் ரானை பறிகொடுத்த மூலக்கூறு ப்ரீரேடிக்கலாக மாற்றம் பெறும். செல்லின் சவ்வை சிதைப்பதால் அதனுடைய கட்டமைப்பு பாதிக்கப்படுகிறது. நச்சுத் தன்மையுடைய ப்ரீரேடிக்கலை நச்சுத் தன்மையற்றதாக மாற்றுவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கு இயற்கையாகவே சில நொதிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தவிர நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் நொதிகள் அல்லாத ஆன்ட்டி ஆக்சிடென்ட்களான வைட்டமின் இ, வைட்டமின் ஏ, பீட்டா கரோட்டின், வைட்டமின் சி, லைக்கோபென், பிளவனாய்ட்ஸ் உள்ளன. அடர் நிறமான காய்கறிகள் மற்றும் பழங்கள், தேன், வெள்ளைப் பூண்டு மற்றும் கீரைகளில் அதிகமான ஆன்ட்டி ஆக்சிடென்ட் உள்ளன.

ஆன்ட்டி ஆக்சிடென்ட் அதிகம் உள்ள சில காய்கறிகள், பழங்கள்: தக்காளி, பீட்ரூட், காரட், முட்டைக்கோஸ், மாதுளை, கருப்பு திராட்சை, நெல்லிக் காய், தர்பூசணி, முலாம்பழம், ஸ்ட்ராபெரி, ஆரஞ்சு, கொய்யா, புதினா, கொத்தமல்லித்தழை மற்றும் கீரை. வெள்ளைப்பூண்டில் செலினியம் என்ற தாது உப்பு ஆன்ட்டி ஆக்சிடென்ட்டாக செயல்படுகிறது.

டென்ஷன் அகன்று ஆழ்ந்த தூக்கம் வேண்டுபவர்கள் இரவு உணவிற்கு பின் ஒரு டம்ளர் மாதுளை அல்லது கருப்பு திராட்சை சாறு அருந்தலாம். இதில் உள்ள தாது உப்புக்கள் (கால்சியம், மக்னீசியம், இரும்பு, சிங்க்) மற்றும் உயிர்ச் சத்துக்கள் (ஆன்ட்டி ஆக்சிடென்ட்) நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி ஆழ்ந்த தூக்கத்தை தருகின்றன. (தகவல்: ரா.அமுதா மற்றும் சீ.ரா. ஆனந்தகுமார், வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104. 0452-242 2956)

**சின்ன சின்ன செய்திகள்**

மே 10,2010,15:58 IST



சவுக்குமரம்: இன்று இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. கரடுமுரடான நிலமா? களர் நிலமா? வளமற்ற நிலமா? தண்ணீர் தேங்கி நிற்கும் நிலமா?நாம் அடிக்கடி சென்று பார்க்கமுடியாத தூரத்தில் உள்ள நிலமா? இப்படிப்பட்டவர்களுக்கு சவுக்கு சாகுபடி கைகொடுக்கும். நிச்சயமாக ஒரு வருமானத்தைக் கொடுக்கும்.

**வகைகள்: 1. நாட்டு ரகம், 2. ஜிங்குனியானா.**

**நாட்டு ரகம்:** இதனை விதைகள் மூலம் நாற்று தயாரித்து நடவு செய்யலாம். அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் வன அதிகாரிகளை அணுகி தரமான விதைகளைப் பெற்று நாமே நாற்று தயாரித்து நடலாம். சாதாரணமாக மழை காலங்களில் இந்த நாற்றுகளை தூக்கிக்கொண்டு வந்து விற்பார்கள். ஆனால் அது சரிப்படாது. நாமே நாற்று தயாரித்து நடலாம் அல்லது தரமான நர்சரியில் வாங்கி நடலாம். சாதாரணமாக ஒரு நாற்றின் விலை ஒரு ரூபாய்தான்.

**ஜிங்குனியானா:** இது தாய்லாந்தை தாயகமாக கொண்டது. உயர் விளைச்சல் ரகம். ஒரு நாற்றின் விலை மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சாதாரண ரகமென்றால் 3 அடி இடைவெளி விட்டு நடவேண்டும். இதற்கு ஏக்கருக்கு 4000 நாற்றுகள் தேவைப்படும். ஜிங்குனியானா என்றால் 6 அடி இடைவெளி விட்டு நடவேண்டும். இதற்கு 2000 நாற்றுகள் தேவைப்படும்.

**நடவுமுறை:** ஓர் அடிஆழத்தில் குழி எடுத்து தொழு உரம் 20 கிராம் போட்டு நடவு செய்ய வேண்டும். நட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். செடி வேர் பிடித்து நன்கு தழையும்வரை மேல் ஈரம் காயாமல், நிலம் காயாமல் நீர் பாய்ச்ச வேண்டும். ஓர் ஆண்டு வரை தேவையான அளவு நீர் பாய்ச்ச வேண்டும். பாடுவாசி ஏற்பட்டால் புதிய நாற்றை உடனுக்குடன் நடவு செய்ய வேண்டும். ஓர் ஆண்டிற்குப்பிறகு மணல்சாரி என்றால் மாதம் 2 முறையும், களிமண் பாங்கான நிலம் என்றால் மாதம் ஒருமுறையும் நீர் பாய்ச்ச வேண்டும். எல்லா பருவத்திலும் நடவு செய்யலாம்.

**உரம் இடும்முறை:** நன்கு மக்கிய தொழு உரம் மழைக்காலத்தில் செடிக்கு ஒரு கிலோ போடலாம். அத்துடன் ஏக்கருக்கு டி.ஏ.பி. உரம் 2 மூடை வரை போட்டு களை எடுத்துவிட வேண்டும்

**தேவையற்ற பாகத்தை நீக்குதல்:** 2வது ஆண்டு முதல் பக்கக்கிளைகளை களைந்துவிட வேண்டும். அறுவடை: 4 ஆண்டில் அறுவடை செய்யலாம். அறுவடையின்போது மரம் 60 அடி முதல் 80 அடி உயரம் இருக்க வேண்டும். சாதாரண ரகம் என்றால் ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும். ஜிங்குனியானா என்றால் ஏக்கருக்கு இரண்டு முதல் இரண்டரை லட்சம் ரூபாய் வரை கிடைக்கும்.

**பழ வகைகளை** (மா, வாழை, பப்பாளி) சீராக பழுக்க வைக்கும் தொழில்நுட்பம்: இந்திய தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், ஹசர்கட்டா, பெங்களூரு-450 089. email: director@iihr.ernet.in மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.
இம்முறையில் காற்றுப் புகாத பிளாஸ்டிக் கூடாரத்தில் எத்ரெலுடன் காரத்தன்மையுடைய சோடியம் ஹைட்ராக்சைடு சேர்க்கும் போது உருவாக்கும் எத்திலீன் வாயுவின் மூலம் பழங்கள் பழுக்க வைக்கப்படுகின்றன.
ஒரு குறிப்பிட்ட கொள்ளளவு கொண்ட காற்றுப்புகாத கூடாரத்தினுள் பிளாஸ்டிக் க்ரேட்டுகளில் (காற்று செல்லக்கூடிய ஓட்டைகள் கொண்டவை) பழுக்காத திரண்ட பழங்கள் பழுப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் ஒரு பாத்திரத்தில் போதுமான அளவு எத்ரெலை வைத்து சோடியம் ஹைட்ராக்சைடு குறிப்பிட்ட அளவு சேர்க்க வேண்டும். எத்திலீன் வாயு கூடாரம் முழுவதும் சீராக பரவுவதற்கு பேட்டரி மூலம் இயங்கும் ஒரு விசிறியினை கூடாரத்திற்குள் வைக்க வேண்டும். 18-24 மணி நேரத்திற்கு பின்பு பழங்களை வெளியே எடுத்து முழுவதுமாக பழுப்பதற்கு அறை வெப்பநிலையில் வைக்க வேண்டும்.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் செம்மை நெல் சாகுபடி**
மே 10,2010,15:56 IST



**விதையளவு:** 7.5 கிலோ/ எக்டேர் நடவு செய்ய. நாற்றங்கால்: 2.50 சென்ட்/ எக்டேர் நடவு செய்ய. 100 சதுர மீட்டர்/எக்டேர் நடவு செய்ய தேவை. நாற்றங்காலுக்கு தெரிந்தெடுக்கப்பட்ட இடமானது சமமாக இருக்க வேண்டும். இதன் மேல் பாலிதீன் பேப்பர் (அல்லது) பயன்படுத்தப்பட்ட பாலிதீன் கோணிப் பைகளை சீராக பரப்ப வேண்டும். பாலிதீன் பேப்பரின் மீது போடுவதற்கு மண் கலவை தயார் செய்யவேண்டும்.
மண் மற்றும் கரும்பு ஆலைக்கழிவு (அல்லது) சாண எரிவாயு கழிவு (அல்லது) மக்கிய தொழு உரம் 70%:20% என்ற விகிதத்தில் கலந்து 10% நெல் உமி/தவிடு கலந்து அதனுடன் 1.500 கிலோ டி.ஏ.பி. (அல்லது) 2 கிலோ 17:17:17 (தழை, மண், சாம்பல் சத்து) கலப்பு உரத்தினைக் கலக்க வேண்டும்.
**மரச்சட்டம்:** 0.5 மீட்டர் அகலம் 1 மீட்டர் நீளம் 4 செ.மீ. ஆழம் கொண்ட மரச் சட்டத்தினை நான்கு பகுதியாக பிரித்திருக்க வேண்டும். அச்சட்டத்தினை பாலிதீன் பேப்பரின் மீது வைத்து 3 செ.மீ. அளவிற்கு மண் கலவையைப் பரப்பி நிரப்ப வேண்டும்.
**முளை கட்டியவிதை:** நன்கு சான்று பெற்ற தரமான 7.5 கிலோ விதையினை 24 மணி நேரம் ஊறவைத்து பின் 24 மணி நேரம் நிழலான இடத்தில் வைத்து மூடிவைக்க வேண்டும். பின் முளைகட்டிய விதையினை நாற்றங்கால் படுக்கையின் மீது விதைக்க வேண்டும்.

**விதைப்பு**: 100 சதுர மீட்டர் பரப்பின் மீது முளை கட்டிய விதையினை சீராக விதைத்து, காய்ந்த மண் கொண்டு விதையை லேசாக மூட வேண்டும். பின் பூவாளி கொண்டு மண்ணை நீரினால் நனைக்க வேண்டும். மரச்சட்டத்தினை மெதுவாக பாலிதீன் சீட்டிலிருந்து எடுத்துவிட வேண்டும். இதுபோன்று 100 சதுர மீட்டர் பரப்பு முழுவதும் மண் கொண்டு நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும்.

**நீர் பராமரிப்பு:** பூவாளி கொண்டு தினமும் 2 அல்லது மூன்று முறை மண்ணின் தன்மைக்கு ஏற்ப மண்ணினை நனைக்க வேண்டும். மழையிலிருந்து நாற்றங்காலை முதல் 5 நாட்களுக்கு பாதுகாக்க வேண்டும். விதைத்த 6வது நாள் நாற்றங்காலை சுற்றி சிறு கால்வாய் போன்று எடுத்து அதில் நீரினை பாய்ச்சி நாற்றங்காலின் மேல் மட்டத்தினை தொட்டுக்கொண்டு இருப்பதுபோல் தண்ணீர் நிரப்ப வேண்டும். நாற்றினை நடுவதற்கு, எடுக்க 2 நாள் இருக்கும் நிலையில் நீரினை முழுவதுமாக வடித்துவிட வேண்டும்.

**உரக்கரைசல் தெளித்தல்:** நாற்றுக்களின் வளர்ச்சி குறைவாக இருந்தால் யூரியா 5 கிராம் + 5 கிராம் சிங்க் சல்பேட்டினை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து விதைத்த 8 முதல் 10 நாட்களில் தெளிக்க வேண்டும்.

**நாற்றுக்களை எடுத்தல்:** நாற்றின் வயது 14வது நாள் ஆன உடன் பாய் நாற்றினை அப்படியே எடுத்து நடவு செய்யலாம்.

**நடவு வயல் தயாரிப்பு:** கோடை உழவு செய்து நடவு உழவின்போது தேவைப்படும் நீர் தேவையை குறைக்கலாம். நடவு வயலில் உழுவதற்கு 2 நாட்களுக்கு முன் 2.5 செ.மீ. நீரினை நிறுத்த வேண்டும். பின் உழவு செய்ய வேண்டும்.

**நடவு வயலினை சமப்படுத்துதல்:** 14 நாட்களான இளம் நாற்றினை நடுவதாலும், 22.5 செ.மீ. இடைவெளியில் சதுர முறையில் நடுவதால், நிலத்தினை உழுது சமப்படுத்துவதில் சிறப்பு கவனம் தேவை. டிராக்டர் அல்லது உழவு மாடு கொண்டு மட்டப் பலகையில் மேடு பள்ளம் இன்றி உழுது, பின் வயலினை சமப்படுத்துதல் அவசியம். அதனால் பயிர் நன்கு வேர்விட்டு சீரான வளர்ச்சி இருக்கும். களை, நீர் மற்றும் உர நிர்வாகம் மிகவும் சிறப்புடன் செய்ய இயலும்.

**நடவு செய்தல்:** மண் பரிசோதனை செய்து மண் சுகாதார அட்டை பெற்று அந்தந்த வயலுக்கேற்ற வகையில் உரம் இடவேண்டும்.


**உயிர் உரம்:** 10 பாக்கெட் (200கிராம்/பாக்கெட்) அசோஸ்பைரில்லம் 10 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தினை 50 கிலோ மக்கிய தொழு உரம் கலந்து சீராக நடவு வயலில் தூவவும். சூடோமோனாஸ்: இயற்கை பூஞ்சாண நோய்க்கொல்லியான சூடோமோனாஸ் 2.5 கிலோ/எக்டருக்கு என்ற வகையில் 50 கிலோ மக்கிய மணலுடன் கலந்து நடுவதற்கு முன் சீராக தூவவும்.

**நடவு**: 22.5 செ.மீ. இடைவெளியில் குத்துக்கு குத்தும், நாற்றுக்கு நாற்றும் விட்டு, ஒரு நாற்று வைத்து, 3 செ.மீ. ஆழத்தில் சதுரமுறையில் நடவு செய்ய வேண்டும். நட்ட 7 நாள் முதல் 10 நாட்களுக்குள் வேர் விடாத நாற்றுக்களை நீக்கிவிட்டு இடைவெளியில் வேறு நாற்று கொண்டு நடவேண்டும். நாற்று பறித்த அரை மணி நேரத்திற்குள் நடவேண்டும். கயிறு பிடித்து சதுர முறையில் நடுவதைவிட மார்க்கர் கொண்டு 22.5 செ.மீ. - 22.5 செ.மீ. இடைவெளியில் குறைந்த நீரில் அடையாளம் இட்டு பின் நடவு செய்வதால் சீரான அளவில் இடைவெளியுடன் வயல் முழுவதும் ஒரே மாதிரி நடமுடியும். கோனோவீடர் களைக்கருவி கொண்டு நடவு நட்ட 10 முதல் 15 நாளில் இருந்து மூன்று முறை 10 நாள் இடைவெளியில் முன்னும் பின்னும் நகர்த்தி களைகளை மண்ணில் புதைத்துவிட வேண்டும். இதனால் மண்ணில் காற்றோட்டம் ஏற்படுகிறது. பழைய வேர்கள் வெட்டப்படும். புது வேர்கள் முளைக்கிறது. இயற்கையான முறையில் களை கட்டுப்படுத்தப்பட்டு பயிரின் வளர்ச்சி மற்றும் தூர்கட்டுதல் ஊக்குவிக்கப் படுகிறது. கோனோவீடர் களைக்கருவி கொண்டு களை நீக்கும்போது மண்ணில் 2 செ.மீ. அளவிற்கு தண்ணீர் சீராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் களைகளை மண்ணில் புதைப்பது இயலாது.

**நீர் நிர்வாகம்**: நடவு நட்ட ஆரம்ப காலங்களில் 10 நாட்களுக்கு ஒரு முறை நூல் அளவு வெடிப்பு தோன்றும்போது 2.5 செ.மீ. நீரினை பாய்ச்ச வேண்டும். இதனை கரு உருவாகும் தருணம் வரை பராமரிக்க வேண்டும். அப்பொழுது அதிக தூர்கள் கட்டி விளைச்சல் அதிகரிக்கும். தொடர்பு: அக்ரி. முரளீதரன், உதவி வேளாண்மை இயக்குனர், பள்ளிப்பாளையம், ஈரோடு. 94430 93729.

கே.சத்தியபிரபா, 67, சர்வலட்சுமி இல்லம், செல்லம் குடியிருப்பு, உடுமலை-642 124.

எதிர்வரும் எண்ணெய் பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3.49 கோடி டன்னாக அதிகரிக்கும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
எதிர்வரும் 2010–11–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இந்தியாவில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3.49 கோடி டன்னாக அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண்துறை மதிப்பீடு செய்துள்ளது. இது, நடப்பு பருவத்தின் உற்பத்தியைக் காட்டிலும் (3.17 கோடி டன்) 10 சதவீதம் அதிகமாக இருக்கும்.

தன்னிறைவு

இந்தியா, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது. நம்நாட்டில் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மத்திய மற்றும் தென் மாநிலங்களில் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் அநேகமாக தன்னிறைவு ஏற்பட்டுள்ளது.
பல்வேறு வகையான எண்ணெய் வித்துக்களில் கடுகு, ஆளிவிதை, நிலக்கடலை, சூரியகாந்தி, சோயாபீன், எள், ஆமணக்கு, தேங்காய், பருத்தி விதை ஆகியவை நம் நாட்டில் பிரதானமாக சாகுபடி செய்யப்படுகின்றன. தேங்காய் எண்ணெய் கொப்பரைத் தேங்காய் மூலம் பெறப்படுகிறது. முக்கிய எண்ணெய் வித்துக்களில் தேங்காய் மட்டும் பெருந்தோட்டப் பயிர்கள் துறையைச் சேர்ந்தது.
இந்தியாவில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்படும் மொத்த பரப்பளவில் 85 சதவீதம் நிலக்கடலை, கடுகு மற்றும் சோயாபீன் ஆகியவையே சாகுபடி செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்வம்

தற்போது உள்நாட்டில் சோயாபீன், நிலக்கடலை மற்றும் சூரியகாந்தி விதைகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதன் காரணமாக விவசாயிகள் இந்த பயிர்களின் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எனினும் கோதுமை மற்றும் சில குளிர்கால பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதால் கடுகு போன்ற சில எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பளவு சற்றே

சரிவடைந்துள்ளது.

முன்னணி நாடுகள்

சர்வதேச அளவில் அமெரிக்கா, பிரேசில், சீனா, இந்தியா, அர்ஜென்டினா, பராகுவே மற்றும் கனடா ஆகிய நாடுகள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. உலகின் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் இந்த நாடுகளின் பங்களிப்பு 96 சதவீதம் என்பது கவனிக்கத்தக்கது. இதர அனைத்து நாடுகளின் பங்களிப்பு 4 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைவாக உள்ளது.

சென்ற 2009 காலண்டர் ஆண்டில் உலகின் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் அமெரிக்காவின் பங்களிப்பு 38 சதவீதமாகும். பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகளின் பங்களிப்பு முறையே 27 மற்றும் 15 சதவீதமாக உள்ளது.

அவ்வாண்டில் சீனாவின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 7 சதவீத அளவிற்கும் இந்தியாவின் உற்பத்தி 4 சதவீத அளவிற்கும் இருந்தது.

கனடா மற்றும் பராகுவே ஆகிய நாடுகளின் பங்களிப்பு தலா 2 சதவீதமாக உள்ளது. இதர அனைத்து நாடுகளிலுமாக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 4 சதவீத அளவிற்கு இருந்தது.

சென்ற ஆண்டில் உலக அளவில் சோயாபீன்தான் மிகவும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உலகின் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் சோயாபீனின் பங்களிப்பு மட்டும் 53 சதவீதமாகும். இதற்கு அடுத்தபடியாக கடுகு 15 சதவீத அளவிற்கு உற்பத்தி ஆகியுள்ளது. பருத்தி விதைகள் மற்றும் நிலக்கடலையின் பங்களிப்பு முறையே 10 சதவீதம் மற்றும் 9 சதவீதமாக இருந்தது. சூரியகாந்தி விதைகளின் உற்பத்தி 8 சதவீத அளவிற்கு இருந்தது. சென்ற ஆண்டில், உற்பத்தியான மொத்த எண்ணெய் வித்துக்களில் கொப்பரை தேங்காயின் பங்களிப்பு ஒரு சதவீத அளவிற்கே உள்ளது.

சென்ற 2009–ஆம் ஆண்டில் உலக நாடுகள் அனைத்துமாக மொத்தம் 39.52 கோடி டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்துள்ளன. இதில், சோயாபீன் மட்டும் 21 கோடி டன்னாகும். பருத்தி விதைகள் 4.13 கோடி டன்னும், நிலக்கடலை 3.42 கோடி டன்னும் உற்பத்தியாகி உள்ளன. கொப்பரை தேங்காய் உற்பத்தி 59 லட்சம் டன்னாக இருந்தது.

புண்ணாக்கு

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரிக்கும்போது அவை சார்ந்த பொருள்களின் உற்பத்தியும் பன்மடங்கு உயர்கிறது. எண்ணெய் வித்துக்களில் இருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. எண்ணெய் எடுத்த பின் புண்ணாக்கு கிடைக்கிறது. புண்ணாக்கு கால்நடைகளுக்கு தீவனமாகவும், விளைநிலங்களுக்கு உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. உலக அளவில், புண்ணாக்கு ஏற்றுமதியில் இந்தியா முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளது.

அமெரிக்க வேளாண் துறை, எதிர்வரும் எண்ணெய் பருவத்தில், இந்தியாவின் சமையல் எண்ணெய் உற்பத்தி 13 சதவீதம் உயர்ந்து 79.10 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது. இது, நடப்பு பருவத்தில் 70 லட்சம் டன்னாக இருக்கும் என்று முன்னறிவிப்பு செய்துள்ளது. குறிப்பாக, எதிர்வரும் பருவத்தில், கடுகு எண்ணெய், சோயா எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என மதிப்பிட்டுள்ளது.

உற்பத்தி

நடப்பு எண்ணெய் பருவத்தில், புண்ணாக்கு உற்பத்தி 1.35 கோடி டன்னாக இருக்கும் என்றும், வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், 1.52 கோடி டன்னாக உயரும் என்றும் அமெரிக்க வேளாண்துறை கூறியுள்ளது. பல்வேறு எண்ணெய் வித்துக்களின் அரவைப் பணிகள் மந்தமடைந்துள்ளதால், நடப்பு பருவத்தில் கிடைக்கும் புண்ணாக்கின் அளவு சற்று குறையும் என்று தெரிகிறது.

**நடப்பு 2010–ஆம் காலண்டர் ஆண்டில் நாட்டின் தேயிலை உற்பத்தி 100 கோடி கிலோவாக உயரும்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு 2010 காலண்டர் ஆண்டில், நாட்டின் தேயிலை உற்பத்தி 100 கோடி கிலோவை எட்டும் என தேயிலை வாரியத்தின் தலைவர் பாசுதேப் பானர்ஜி தெரிவித்தார். சென்ற ஆண்டில் தேயிலை உற்பத்தி 97.90 கோடி கிலோவாகவும், முந்தைய 2008–ஆம் ஆண்டில் 98.10 கோடி கிலோவாகவும் இருந்தது. சென்ற ஆண்டில் உற்பத்தி 20 லட்சம் கிலோ குறைந்துள்ளது.
பருவமழை
நடப்பு ஆண்டில், ஜூன்–செப்டம்பர் மாத காலத்தில் பருவமழை நன்கு இருக்கும் என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதன் அடிப்படையில் உள்நாட்டில் தேயிலை உற்பத்தி, நடப்பாண்டில், 100 கோடி கிலோவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீடுகளுக்கு மாறாக பருவமழை அளவு குறையும் பட்சத்தில் தேயிலை உற்பத்தி குறையலாம்.
சென்ற நிதி ஆண்டில் 20 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலும் இதே அளவிற்கு ஏற்றுமதி மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 19 கோடி கிலோவாக இருந்தது.
போட்டி
நம்நாடு சி.டி.சி. ரக தேயிலையை, பிரதானமாக எகிப்து, பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. உயர்தர ஆர்தோடக்ஸ் தேயிலை ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தேயிலை ஏற்றுமதியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக உள்ளபோதிலும், நம் நாடு இதர நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.
கென்யா
இந்தியா, சி.டி.சி. ரக தேயிலை ஏற்றுமதியில், கென்யா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் ஆர்தோடக்ஸ் ரக தேயிலை ஏற்றுமதியில் இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் போட்டியை ஏற்படுத்தியுள்ளன.
தேநீரின் நன்மைகளை உணர்த்தும் வகையில் தேயிலை வாரியம் உள்நாட்டில் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என பானர்ஜி கூறினார். தற்போது நம் நாட்டில் ஒரு ஆண்டுக்கு தனிநபர் தேயிலை நுகர்வு 800 கிராம் ஆக உள்ளது. இது, பாகிஸ்தானில் ஒரு கிலோவாக உள்ளது.
நாட்டின் தேயிலை உற்பத்தியில் அசாம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. மொத்த தேயிலை உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

**தேயிலைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பதில்**

சென்னை, மே.12–
தேயிலைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோவை தங்கம் (காங்கிரஸ்)

எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பதில் அளித்தார்.

அரசே கொள்முதல்

சட்டசபையில் நேற்று கேள்வி நேரத்தின் போது வால்பாறை காங்கிரஸ் எம்.எல்.ஏ. கோவை தங்கம், “வால்பாறையில் உற்பத்தியாகும் தேயிலையை கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?'' என்று கேட்டார்.

அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்:– அரசு சார்ந்த நிறுவனமான தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் ‘டேன்டி’ மூலம் தான் தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது. அரசே நேரடியாக தேயிலை கொள்முதல் செய்வதில்லை.

இடைத்தரகர்களுக்கு லாபம்

கோவை தங்கம்:– தேயிலை உற்பத்திக்கு ஒரு கிலோவுக்கு ரூ.50 செலவாகிறது. வெளிச் சந்தையில் ஒரு கிலோ தேயிலை ரூ.80, 90 வரை விற்கப்படுகிறது. இதில் இடைத்தரகர்கள் இந்த தேயிலையை குறைந்த விலைக்கு வாங்கி கேரள மாநிலத்தில் விற்று அதிகமான லாபம் அடைகிறார்கள். டேன்டி நிறுவனம் சில எஸ்டேட்டுகளில் மட்டுமே தேயிலை கொள்முதல் செய்கிறது. எனவே அரசே நேரடியாக கொள்முதல் செய்தால் அதிக வருமானம் கிடைக்கும். தொழிலாளர்களுக்கும் அதிக சம்பளமும், போனசும் கிடைக்கும்.

சவுந்தரபாண்டியன்(தி.மு.க.):– ஊட்டியிலும், குன்னூரிலும் 2 நிறுவனங்கள் தேயிலை கொள்முதல் செய்கின்றன. ஆனால் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குறைந்த விலைக்கு தேயிலை வாங்கி அதிக லாபம் அடைகிறார்கள். எனவே அரசே நேரடியாக கொள்முதல் செய்தால் பயனுள்ளதாக இருக்கும்.

உரிய விலை கிடைக்க

வீரபாண்டி ஆறுமுகம்:– ஊட்டியில் ஒழுங்குமுறை விற்பனை வணிக வளாகம் அமைத்து தேயிலை வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. உரிய விலை கிடைக்கவில்லை, விவசாயிகள் ஏமாற்றப்படும் சூழ்நிலை உள்ளது என்பதால் அங்கு உரிய அதிகாரிகளை அனுப்பி, அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பதில் அளித்தார்.